www.Padasalai.Net www.TrbTnpsc.com

RS-I

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

**11** - ஆம் வகுப்பு

## உயிரியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 70

### உயிரி - தாவரவியல்

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 8 x 1 = 8

1. பட்டியல் I - ஐ பட்டியல் II - உடன் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் - I | | பட்டியல் -II | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|---|
| A. ஒரு போக்கு எதிரிலை அடுக்கமைவு | - | i) கலோட்ராபிஸ் | அ) | iii | iv | ii | i |
| B. குறுக்கு மறுக்கு எதிரிலை அடுக்கமைவு | - | (ii) சிடியம் | ஆ) | ii | i | iv | iii |
| C. மூவிலை அடுக்கமைவு | - | (iii) அலமாண்டா | இ) | i | ii | iii | iv |
| D. வட்ட இலை அடுக்கமைவு | - | (iv) நீரியம் | ஈ) | iv | iii | ii | i |

2. ............. என்ற சொல் தொல்லுயிர் எச்சத் தாவரங்களுக்கு பெயர் சூட்டப் பயன்படுத்தப்படுகிறது.
அ) உரு சிற்றினம் ஆ) உரு பேரினம் இ) ஹெர்பேரியம் ஈ) தாவர மாதிரி

3. ***கூற்று :*** $C_4$ தாவரங்கள் $C_3$ தாவரங்களை விடச் சிறந்ததாக கருதப்படுகிறது
***காரணம் :*** ஏனெனில் $C_4$ தாவரங்கள் $C_3$ தாவரங்களை விட அதிகளவு ஆற்றலை ஒளிச்சுவாசத்தின் போது இழக்கிறது. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

4. பின்வருவனவற்றுள் எந்த முறை விதை உறக்கத்தை நீக்க பயன்படுத்தப்படுகின்றன?
அ) விதையுறை செதுக்கீடு ஆ) மோதல் நிகழ்த்துதல் இ) அடுக்கமைத்தல் ஈ) இவை அனைத்தும்

5. செல் சவ்வின் அமைப்பில் பாய்ம திட்டு மாதிரியைக் கருத்தில் கொண்டு லிப்பிடுகளும் புரதங்களும், லிப்பிடு ஒற்றை அடுக்கிலிருந்து மறுபுறத்திற்கு இடம் பெயர்ந்து செல்லக் கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது
அ) லிப்பிடுகள் மற்றும் புரதங்கள் அங்கும் இங்கும் இடம் பெயர்வதில்லை
ஆ) லிப்பிடு மற்றும் புரதங்கள் அங்கும் இங்கும் இடம் பெயர்கின்றன.
இ) லிப்பிடுகள் அரிதாக அங்கும் இங்கும் இடம் பெயர்கின்றன புரதங்கள் அல்ல.
ஈ) புரதங்கள் அங்கும் இங்கும் இடம் பெயர்கின்றன. லிப்பிடுகள் அல்ல.

6. தூய நீரின் நீரியல் திறன் ஆனது .............. , அ) ஒன்றை விடக் குறைவு
ஆ) பூஜ்ஜியத்தை விட அதிகம் ஆனால் ஒன்றை விடக் குறைவு இ) ஒன்றை விட அதிகம் ஈ) பூஜ்ஜியம்

7. செல்லுலோசில் உள்ள β.D. குளுக்கோஸ் அலகுகள் ஒன்றுடன் ஒன்று ........ பிணைப்பால் இணைக்கப்பட்டுள்ளது. அ) N – அசிட்டைல் பக்க சங்கிலிகள் ஆ) N - அசிட்டைல் D குளுக்கோசமைன் இ) 1 –> 3 பிணைப்பு ஈ) β - (1, 4) கிளைக்காசைட்டிக் பிணைப்பு

8. கீழ்கண்ட வாக்கியங்களைக் கருத்தில் கொள்க. வசந்தகாலத்தில் கேம்பியம்
(i) குறைவான செயல்பாடு கொண்டது (ii) அதிகப்படியான சைலக் கூறுகளை தோற்றுவிக்கின்றன
(iii) அகன்ற உள்வெளி கொண்ட சைலக் குழாய்கள் உருவாக்குகிறது.
அ) (i) - சரியானது ஆனால் (ii) மற்றும் (iii) - சரியானவையல்ல.
ஆ) (i) –சரியானதல்ல ஆனால் (ii) மற்றும் (iii) – சரியானவை
இ) (i) மற்றும் (ii) – சரியானவை ஆனால் (iii) – சரியானதல்ல
ஈ) (i) மற்றும் (ii) – சரியானவையல்ல ஆனால் (iii) - சரியானது

**II குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4 x 2 = 8

9. சூழல் ஒளி பாஸ்பரிகரணத்தின் விளக்க வரைபடம் வரைக.
10. திட்டமிடப்பட்ட செல் இறப்பு என்பது என்ன?
11. டைலோஸ்கள் என்றால் என்ன?
12. வேரின் பகுதிகளைப் படம் வரைந்து பாகம் குறி,
13. 'மின் - சவ்வூடு பரவல் கொள்கை' - வரையறு.
14. இருவிதையிலைகளையும் கோப்பை வடிவப் பூத்தளத்தையும் கொண்ட தாவரங்களை எவ்வாறு வகைப்படுத்துவாய்?

**III குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண். 19 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்).** 3 x 3 = 9

15. பூஞ்சைவேரிகளின் முக்கியத்துவத்தை எழுதுக.
16. ஆக்சின் வாழ்வியல் விளைவுகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.
17. கிளைட்டோரியா டெர்னேஷியா - மலரின் வரைபடம் வரைந்து மலர் சூத்திரத்தை எழுதுக.
18. ஒளி சுவாசம் மற்றும் இருள் சுவாசத்திற்கு இடையேயான வேறுபாடுகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.
19. (i) சுவாச விகிதத்திற்கான வாய்ப்பாடு யாது? (ii) காற்றிலாச் சுவாசத்தின் போது சுவாச ஈவு முடிவிலி ஏன்?

**IV குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2 x 5 = 10

20. அ) இருவிதையிலை வேருக்கும், ஒருவிதையிலை வேறுக்கும் இடையே உள்ள உள்ளமைப்பியல் வேறுபாடுகளை எழுதுக. *(அல்லது)* ஆ) நைட்ரஜன் சுழற்சியை விளக்குக.
21. அ) பசுங்கணிகத்தின் அமைப்பை படத்துடன் விவரி. *(அல்லது)*
ஆ) கிரப்ஸ் சுழற்சி அல்லது சிட்ரிக் அமிலச் சுழற்சியை விவரி, (விளக்க வரைபடம் மட்டும்).



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## உயிரி விலங்கியல்

மதிப்பெண்கள்: 35

### பகுதி - அ

I **சரியான விடையைத் தேர்ந்தெடு.**
(அனைத்து வகை வினாக்களுக்கும் விடையளி) 1 X 8 = 8

1. கனசதுர வடிவ எபிதீலியத்தின் முக்கியப்பணி என்ன?
அ) பாதுகாப்பு ஆ) சுரப்பு இ) உறிஞ்சுதல் ஈ) சுரப்பு மற்றும் உறிஞ்சுதல்

2. கீழ்க்கண்ட எந்த விலங்கில் திறந்த வகை சுற்றோட்ட மண்டலம் காணப்படுகிறது?
அ) தவளை ஆ) மண்புழு இ) புறா ஈ) கரப்பான் பூச்சி

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள விலங்கு ஒரு____ அ) பாலூட்டி



ஆ) பறவை இ) பறக்கும் எலி ஈ) பறக்கும் ஊர்வன

4. இரத்த உறைதலில் பங்கேற்கும் பிளாஸ்மா புரதம் எது?
அ) குளோபுலின் ஆ) ∴பைப்ரினோஜன் இ) அல்புமின் ஈ) சீரம் அமைலேஸ்

5. உமிழ்நீரில் _____உள்ளது. அ) மிகச்சிறிய அளவிலான நைட்ரஜன் கழிவுகள்
ஆ)அதிக அளவிலான நைட்ரஜன் கழிவுகள் இ) ஹைடிரோ கார்பன்கள் ஈ) வைட்டமின்கள்

6. மாக்ரோ∴பேஜ்கள் வெளிப்படுத்தும் இயக்கம்
அ) நீளிழை ஆ) குறுயிழை இ) தசையியக்கம் ஈ) அமீபா போன்ற இயக்கம்

7. காதிலுள்ள எப்பகுதி அழுத்த அலைகளைச் செயல்நிலை மின்னழுத்தமாக மாற்றுகிறது?
அ) செவிப்பறை சவ்வு ஆ) கார்ட்டை உறுப்பு இ) நீள் வட்டப் பலகணி ஈ) அரைவட்டக் குழல்கள்

8. பொருத்துக.

| பத்தி I | பத்தி II | |
|---|---|---|
| A கொனடோட்ரபின் விடுவிப்பு ஹார்மோன் (GnRH | I எலும்பு உருவாக்கம் | அ A-IV B-V C-II D-III E-I |
| B மேமோட்ரோபின் | II ஹைபோகிளைசீமிக் ஹார்மோன் | ஆ A-III B-I C-IV D-II E-V |
| C கொனேரியம் | III பீனியல் சுரப்பி | இ A-II B-III C-I D-V E-IV |
| D இன்சுலின் | IV பால் உற்பத்தியைத் தூண்டுகின்றது | ஈ A-V B-IV C-III D-II E-I |
| E கால்சிட்ரியால் | V நுண்பை செல்களைத் தூண்டும் ஹார்மோன் (FSH) சுரப்பைத் தூண்டுகின்றது | |

### பகுதி - ஆ

II **மிகக்குறுகிய விடையளி.** (எவையேனும் நான்கு வினாக்களுக்கு) 4 X 2 = 8

9. ஹக்ஸ்லி மற்றும் ஸ்ட்ரிக்லேண்ட் ஆகியோர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெயரிடும் முறை எது? வீட்டு காகத்திற்கு அம்முறைப்படி பெயரை எழுதுக?
10. மண்புழுவை அடையாளம் காணப் பயன்படும் பண்புகள் எவை ?
11. சிறுகுடலில் மட்டும் குடலுறிஞ்சிகள் உள்ளன ஏன் இரைப்பையில் இல்லை?
12. தட்டைப்புழு, மண்புழு ஆகியவற்றின் சுவாச உறுப்புகளின் பெயர்களைக் கூறு.
13. டெட்டானி எவ்வாறு ஏற்படுகிறது?
14. கீழே கொடுக்கப்பட்டுள்ள கிரஸ்டேஷியனின் பெயர் என்ன? இதில் கொழுப்பு அதிகமாக உள்ளதா அல்லது குறைவாக உள்ளதா?



### பகுதி - இ

III **குறுகிய விடையளி** (கேள்வி எண் 19-க்கு கட்டாயம பதில அளாககவும (ஏதேனும் மூன்று வினாக்களுக்கு). 3 X 3 = 9

15. விலங்கு காட்சிச் சாலைக்கும் வனவிலங்கு சரணாலயத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?
16. நிமோனியா ஏன் ஒரு ஆபத்தான நோயாகக் கருதப்படுகிறது?
17. ஈ.சி.ஜி யின் கட்ட வரைபடம் வரைந்து பாகங்களை குறி
18. கோராய்டு வலைப் பின்னல் மூளை தண்டுவடத் திரவத்தைச் சுரக்கிறது. அதன் செயல்பாடுகளை வரிசைப்படுத்துக.
19. வாத்தின் ஏதேனும் மூன்று தனிப் பண்புகளை எழுதுக.

### பகுதி - ஈ

IV **விரிவான விடையளி.** (எவையேனும் இரண்டு வினாக்களுக்கு) 2 X 5 = 10

20. அ. அட்ரினலின் ஹார்மோன் பணிகளை விவாதி. (அல்லது)
ஆ. கிளாமருலார் வடிகட்டுதலை துரிதப்படுத்தும் விசைகள் யாவை? கிளாமருலார் வடிகட்டுதலுக்கான எதிர்விசைகள் யாவை? நிகர வடிகட்டுதல் அழுத்தம் என்றால் என்ன?

21. அ. சுரப்பு எபிதீலியம் பற்றி விவரி (அல்லது)
ஆ. பறவைகளின் அகச்சட்டகத்தின் தனித்துவம் வாய்ந்த பண்புகளைக் குறிப்பிடுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com